**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.114/2021**

**வா.சா. –2– காளிமுத்து**

**நாள். 07.01.2025**

**வா.சா.2 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.1,3,4 மற்றும் 5 ஆவணங்களான தாவா 4 புரோநோட்டில் எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்ற விபரம் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா 4 புரோநோட்டில் வெவ்வேறு தேதியில் கையொப்பம் செய்தேன். தேதிகள் சொல்ல முடியுமா என்றால் தற்போது ஞாபகமில்லை. எனது பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை. எந்த இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்ற விபரமும் சொல்லவில்லை. கையொப்பம் செய்யும் போது அருகில் யார் யார் இருந்தார்கள் என்ற விபரமும் சொல்லவில்லை. கையொப்பம் செய்யும் போது நான் மட்டும் இருந்தேன் என்றால் சரிதான். அவ்வாறு பணம் பெற்ற போது நான் உடன் இருந்தேன் பணத்தை பையில் வைத்துக்கொடுத்தார். கொடுத்த பணத்தில் எத்தனை 1000 ரூபாய் தாள்கள், 500 ரூபாய் தாள்கள், 100 ரூபாய் தாள்கள் இருந்த விபரம் தெரியாது. பையில் வைத்து பணம் கொடுத்த விபரம் எனது பிரமாண சொல்லியுளேனா என்றால் சொல்லவில்லை. வாதி வங்கியிலிருந்து பணம் எடுத்து வந்து கொடுத்தார். அதை எனது பிரமாண பத்திரத்தில் சொல்லவில்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.01.08 16:02:36 +0530

Additional District Judge(FAC),

Dindigul.